Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | ஹேவிளம்பி பங்குனி 1958 மார்ச்சு | இதழ் 3

சமாஜ வேண்டுகோள்

(ஆசிரியர்)

பாண்டிய மன்னர்களுள்ளே சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்று ஒருவன் இருந்தான். கி. பி. 1422 முதல் 1463 வரை அம்மன்னன் அரசாண்டான். 'பொன்னின் பெருமாள்' 'மான கவசன்' முதலிய சிறப்புப் பெயர்கள் அவனுக்கு உரியன. வடமொழியிலும் தமிழிலும் பெரும் புலமை வாய்ந்தவனாய் அம்மன்னவன் விளங்கினான். திருக் குற்றாலத்திற்கு அணித்தாக உள்ள தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டியவன் அம்மன்னனே யாவான். விசுவ நாதப் பேரேரி என்னும் ஏரி ஒன்றனையும் அம்மன்னன் அமைத்திருக்கின்றான். தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டி முடித்தற்காக 17-ஆண்டுகள் அவன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டான். அவ்வரசனால் தொடங்கப்பெற்ற அக்கோயிலின் ஒன்பது நிலைக்கோபுரம் அவன் காலத்தில் முடிவுறாமல், அவன் உடன்பிறந்தானாகிய சடையவர்மன் குலசேகர பாண்டியனாலேயே பின்னர்க் கட்டி முடிக்கப் பெற்றது. 17-ஆண்டுகள் அரும்பாடு பட்டுத் தன்னால் எழுப் பப் பெற்ற அப் பெருங்கோயிலின்பால் பராக்கிரம பாண் டியன் அளவற்ற பேரீடுபாடு கொண்டிருந்தான். அக் கோயில் என்றென்றும் நின்று நிலவுதல் வேண்டும் எனவும், தன்னைப் போலவே தனக்குப் பின் தன் மரபில் வரும் அரசர்களும் அதனைப் போற்றிக் காத்து வளர்த்து வருதல் வேண்டும் எனவும் அம் மன்னர்பிரான் பெரிதும் விரும்பி

ஞன். அத்திருக்கோயிலும், அதனைச் சார்ந்த பல அறக் கட்டளைகளும் எத்தகைய குறைபாடும் இடையூறும் இன்றி முறைமுறையே நாளும் வளர்ந்தோங்கி நடைபெற்று வரல் வேண்டும் எனப் பேரார்வம் மிக்குத் திகழ்ந்திருந் தான். அம்மாமன்னவன் தான் உயிர் துறக்கப் போகும் இறுதி நேரத்தில் தன் வேண்டுகோட் செய்தியாகப் பாடி யுள்ள பாடல்கள் எத்தகைய கருங்கல் மனத்தினையும் கரைந்துருகச் செய்ய வல்லனவாகும். கீழ்வரும் அப்பாடல் கள் தென்காசி விசுவநாதர் கோயிலின் சிதைந்து இடிந் துள்ள கோபுரச் சுவர்களிற் பொறிக்கப்பட்டுள்ளன.

சேலே றியவயற் றென்காசி ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்ததுஇங்கு என்செயல் அல்ல ! அதனைஇன்னும்
மேலே விரிவுசெய் தேபுரப் பார்அடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவேன் பராக்ரம பாண்டியனே !

மனத்தால் வகுக்கவும் எட்டாத கோயில் வகுக்கமுன்நின்று,
எனைத்தான் பணிகொண்ட நாதன்,தென் காசியை என்றும்மண்மேல்
நினைத்து,ஆ தரஞ்செய்து தம்காவல் பூண்ட நிருபர்பதம்
தனைத்தாழ்ந்து, இறைஞ்சித் தலைமீது யானும் தரித்தனனே !

ஆரா யினும்இந்தத் தென்காசி மேவும்பொன் ஆலயத்து
வாராத தோர்குற்றம் வந்தால்,அப் போதங்கு வந்ததனை
நேராக வேஒழித் துப்புரப் பார்களை, நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே !

பூந்தண் பொழில்புடை சூழும்தென் காசியைப் பூதலத்தில்
தாம்தம் கிளையுட னேபுரப் பார்கள்,செந் தாமரையாள்
காந்தன் பராக்ரமன் கைதவன் மானகவ சன்கொற்கை
வேந்தன் பணிபவர் ஆகி,எந் நாளும் விளங்குவரே !

அரிகே சரிமன் பராக்ரம மாறன் அரன்அருளால்
வரிசேர் பொழில்அணி தென்காசிக் கோயில் வகுத்து,வலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேன்!அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதம்என் சென்னியதே !

சாத்திரம் பார்த்திங்கு யான்கண்ட பூசைகள் தாம்நடத்தி
ஏத்திஅன் பால்விசுவ நாதன்பொற் கோயில்,என் றும்புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடன்நம்
கோத்திரம் தன்னிலுள் ளார்க்கும் அடைக்கலம் கூறினனே !

பராக்கிரம பாண்டியன் தென்காசி விசுவநாதர் கோயிலை எடுப்பித்தமை போல, ஆசிரியர் மறைமலை அடிகள், அருட்டிரு. ஞானியாரடிகள், திரு. ஜே. எம். நல்லசாமி பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் போன்ற சான்றோர்கள் பற்பலர் நமது சமாஜத்தினைத் தோற்றுவித்துக் காத்துவளர்த்து வந்துள்ளனர். சர். பொன்னம்பலம் இராமநாதன், பாண்டித்துரைத்தேவர், வி. ஏ. கனகசபைப்பிள்ளை, அம்பலவாணநாவலர், சபாரத்தின முதலியார், சுவாமிநாத பண்டிதர், சர். டி.என். சிவஞானம் பிள்ளை, டி. பொன்னம்பலம் பிள்ளை, விபுலானந்தஅடிகள் முதலிய எத்துணையோ பெருமக்கள் பலர் சமாஜ ஆண்டு விழாக்களுக்குத் தலைமை ஏற்று அணிசெய்துள்ளனர். தமிழ்ப்பெரியார் திரு.வி.க., பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., பெரும் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் போன்ற பேரறிஞர்களெல்லாம் சமாஜத்துடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்திருக்கின்றனர். இதுபோதும் சைவப்பெரியார்கள் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. நல். முருகேச முதலியார் ஆகியோர் நமது சமாஜத்தினைக் கண்ணெனப் போற்றிக் காத்துவருகின்றனர். இப்பெரியோர்களின் வாயிலாக நமது சைவ சித்தாந்த மகா சமாஜம் கடந்த ஐம்பது ஆண்டுகட்கு மேலாகச் சைவமும் தமிழும் தழைக்க அரும்பெரும் பணிகள் ஆற்றிவந்துள்ளது. தென்றமிழ் நாட்டுச் சமய வரலாற்றில் இந்நூற்றாண்டில் நமது சமாஜம் செய்துள்ள தொண்டுகள் தனிப்பெருஞ் சிறப்பிடம் பெறுதற்குரியனவாகும். தமிழகத்தின் இணையற்ற ஒரு மாபெருஞ் சைவப் பொது நிறுவனமாக இஞ்ஞான்று திகழ்ந்துவருவது நம் சமாஜமே என்றல் மிகையன்று. பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், சங்க இலக்கியங்களையும், சீவக சிந்தாமணி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ்ஆகிய நூல்களையும் திருத்தமுற ஆராய்ந்து வெளியிட்டிருப்ப தொன்றே, சமாஜத்தின் உயரிய பெருஞ் சிறப்புக்கு உரிய சான்றுதல் அமையும். தான் எழுப்பிய பெருங்கோயில் என்றென்றும் நின்று நிலவுதல் வேண்டும் எனப் பராக்கிரம பாண்டியன் விரும்பியது போல, நமது

சமாஜத்தினைத் தோற்றுவித்தருளிய சான்றோர்களும் கூட, இஃது என்றென்றும் நின்று நிலவி வளர்ந்தோங்கித் தொண்டாற்றி வருதல் வேண்டும் எனப் பெரிதும் விரும்பியிருப்பார்கள் அல்லரோ? அப்பெருமக்களின் விருப்பங்களையெல்லாம் ஓரளவேனும் நிறைவேற்ற வேண்டுதல் நம்மனோர்க்கு இன்றியமையாத கடமையாகும் அன்றோ? அக்கடமையினை எளிய முறையில் நிறைவேற்றும் அரிய வாய்ப்பு ஒன்றனைச் சமாஜ வேண்டுகோள் நமக்கு உண்டாக்கித் தந்துள்ளது.

" தமிழ்நாட்டில் மிகப்பெரிய சமய அமைப்பாக 50-ஆண்டு கட்கு மேலாகப் பணிபுரிந்து வரும் நமது சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்கண் சைவநன்மக்கள் அனைவரும் உறுப்பினரா தல் வேண்டும் என இம்மகாநாடு வற்புறுத்திவேண்டிக் கோள்ளுகின்றது " என அண்மையிற் சென்னைத் திருமயிலையில் நிகழ்ந்த சமாஜத்தின் 52-ஆம் ஆண்டுவிழா மாநாட்டுப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றுள்ளது. ஆதலாற் சைவத் தமிழ் அன்பர்கள் அனைவரும் ஆண்டுச் சந்தா நபா மூன்று (3—0—0) செலுத்தி உறுப்பினர்களாகச் சேருமாறும், முன்னரே சமாஜத்தின் உறுப்பினர்களாக இருப்பவர்கள் தத்தம் பங்காகக் குறைந்தது ஒரு புதிய உறுப்பினரை யாவது சேர்த்துத் தருமாறும், இதனை ஒரு பெரிய சமயக் கடமை எனக் கொண்டு உறுப்பினர் தொகையைப் பெருக்கும் முயற்சியில் ஒல்லும் வகையா னெல்லாம் உதவி செய்யுமாறும், சமாஜ அன்பர்கள் அனைவரையும் சமாஜம் பெரிதும் வற்புறுத்தி வேண்டிக்கொள்கின்றது.

சமாஜ வரவேற்புரை

[சென்னைத் திருமயிலாப்பூரில் 27, 28, 29-12-1957ல் நிகழ்ந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு நிறைவு விழாவில், சைவ இளைஞர் மாநாட்டுத் திறப்பாளர்-உயர்திரு. மணலி. இராமகிருஷ்ண முதலியார், பி. ஏ., அவர்கட்குச் சமாஜத்தினர் அளித்தது. யாத்தவர் : புலவர் - முருகவேள், எம். ஓ. எல்.]

சைவமெய்ச் சமயம் " சமயா தீதமாய்
அரசாங்கத் தமர்ந்தது! அழகிது " என்றே

சான்றோர் பலரும் தகவுறப் போற்ற,
அந்தமில் சிறப்பிற் செந்தமிழ் நெறியாய்த்
தொன்னெடுங் காலமாய்த் துரிசற விளங்கிச்
சமய குரவர் சந்தான குரவர்
தமதுயர் அருட்பெருந் தகைமையின் வளர்ந்து,
சாத்திரம் தோத்திரம் எனவே சாற்றிடும்
பொருள்நூல் புகழ்நூல் தெருளுறப் பெற்று,
எல்லா மதங்களின் இனியபல் கொள்கையும்
ஒல்லும் வகைதழீஇ உவந்தினி தோம்பி
உய்ந்நெறி யதனை மன்பதைக் குணர்த்தும்
செந்நெறி யாகும்! சிறந்தஅதன் கொள்கைகள்
சாரங் கொண்டநற் சைவசித் தாந்தம்
எனப்பெறும்! அதனை அறிஞர்கள் எல்லாம்
வேதாந்த நூற்களின் விழுப்பொருட் டெளிவாம்
சைவசித் தாந்தம்எனச் சால்பிற் போற்றுவர்!
சிறப்பின் மிக்கஅச் சைவசித் தாந்தம்
உலகெலாம் பரவி ஒளிர்தல் வேண்டி
நிறைபெருந் திருவினர் மறைமலை அடிகள்
ஞானியார் அடிகள்முதல் நற்பெருஞ் சான்றோர்
தோற்றுவித் தருளிய மாட்சிமை யுடையதாய்
ஐம்பதின் மேற்பல ஆண்டுக ளாக
அரும்பெருந் தொண்டுகள் ஆற்றி வருவது
சைவசித் தாந்தமா சமாஜம் ஆகும்!
அனையபல் சிறப்பின் இனியநம் சமாஜத்தின்
• ஐம்பத் திரண்டாம் ஆண்டு விழாத்தான்
சென்னை மயிலையில் சிறப்புற நிகழ்ந்திடச்
சைவ இளைஞர்மா நாட்டினைத் திறக்க
இசைந்து போந்த இராம கிருஷ்ண
முதலியார் என்னும் முதுபெருங் குரிசில்!
செல்வமும் கல்வியும் சேர்ந்தொளிர் தோன்றல்!
எணலருஞ் சிறப்பின் மணலியார் குடியில்
நானிலம் பரவும் சீனிவாச முதலியார்
அருந்தவப் பயனாய்ப் பிறந்தருள் புதல்வ!
சென்ன கேசவர் சென்னமல்லி கேசுரர்
திருக்கோ யில்களின் அறப்பெருங் காவல!
மாணவர் விடுதிகள் பேணுநல் அறிஞ!

சென்னைமா நிலத்தில் திகழும்ஆ லயங்களின்
தருமகர்த் தர்களின் தனிப்பெருந் தலைவ!
சமய அமைப்புகள், தரும நிலையங்கள்
என்பன எல்லாம் இனிது தழைக்கக்
கண்ணும் கருத்துமாய் நண்ணி உழைக்கும்
ஊக்கம் மிக்க உத்தமச் செம்மால்!
நன்றுநின் வரவு நல்வர வாகென,
மகிழ்ந்து பெரிதும் வரவேற்கின் றேமே!

நீரிற் குமிழி

(புலவர்மணி - வித்துவான் - மு. இரத்தினதேசிகர், திருவாரூர்)

செங்கதிரவன் மேற்றிசையில் மறையும் மாலை நேரம். அலைமோதும் நெடியதோர் நீர்நிலை, அதன் ஒரு கரையிலே கவிந்த முகத்துடன், ஆழ்ந்த சிந்தனையைக் கொண்டு இளந்துறவி ஒருவர் தோற்றம் அளித்தார். நீர் ஓரத்தே சென்று நெடியமாமரத்தின் பெரிய வேர் ஒன்றில் அமர்ந்து நீர் நிலையை உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். மரத்தின் காய் ஒன்று காற்றால் தாக்குண்டு நீர்ப்பரப்பில் விழுந்தது. கீழே சேறு, அதில் காய் சென்று தாக்கியதால் காற்றுக் குமிழிகள் ஒன்றன்பின் ஒன்றாய் எழலாயின. எழுந்த குமிழிகள் நீர்மட்டத்தை அடைந்தன. அடுத்த கணத்தே மறைந்தன. இதனைக் கண்ணுற்ற துறவி அலைமோதும் நெடு நீரை மீண்டும் உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். நீர் நிலையின் நடுவே பெருவேகத்தோடு எழுந்தன அலைகள். அவை கரைசாரக் கரைசார வலிகுன்றித் தோற்றமற்று மறைந்தன.

இவ்விரு தோற்றங்களிலும் தம் உள்ளத்தைப் பதித்திருந்த அத்துறவி, தன் கைக்கோலால் நீர்ப்பரப்பின் மீது கோடொன்று இழுத்தார். நிற்குமா அந்தக் கோடு? தோன்றும் போதே அந்தக் கோடு மறைந்துகொண்டே வந்தது. இந்த மூன்று நிகழ்ச்சிகளும், அவ்விளந்துறவியை எங்கெங்கோ செலுத்திவிட்டன.

மனித வாழ்வில் இளமை ஒரு பருவம். நக்கீரர் முருகனை "என்றும் இளையாய் அழகியாய்" என்றார்.

அந்த இளமை தெய்வ இளமை, என்றும் உள்ள இளமை, அது மனிதருக்கு வருமோ ? " இளமையும் நில்லா யாக்கையும் நில்லா, வளவியவான் பெருஞ் செல்வமும் நில்லா " என்பது தானே முடிந்த உண்மை ? நீரிற் குமிழி தோன்றி விரைவில் மறைந்ததைக் கண்ட அடிகள், அதனை இளமையோடு ஒப்பிட்டு, " நீரிற் குமிழி இளமை " என்றார்.

செல்வம் அகடுற யார்மாட்டும் நில்லாது 'சகடக்கால் போற் புரளுவது, ஆறிடும் மேடும் மடுவும்போல் மாறிடுவது. ஆண்டி அரசனாகிறான் ; அரசன் ஆண்டியாகிறான். இப்படிப்பட்ட எண்ண அலைகள் அடிகளின் உள்ளத் தடத்தே எழுந்து பரந்தன. பெருக்க எழும்பிக் கரைசார மறையும் அலைகளைக் கண்டு அழியும் செல்வத்தை அவற்றோடு ஒப்பிட்டார். எழுந்தது மற்றொரு தொடர். " நிறை செல்வம் நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் " என்று இணைத்தார்.

மங்கல மொழி என்பது இலக்கணத்து உள்ளதோர் தகுதி வழக்கு, நச்சுப் பையை வைத்திருக்கும் பொல்லாத பாம்பை " நல்ல பாம்பு " என்று அழைப்பது தமிழ் மரபு. கெட்டவரைக் கெட்டவர் என்று சொல்வது தமிழ் நாட்டுப் பண்பாடன்று. வசை மொழியிலும் நாகரிகத்தைக் காட்டுவது தமிழர் தம் தகைமை. இதனாலன்றோ வள்ளுவர் தம் மறைமொழியில், " தேவர் அனையர் கயவர் அவரும் தாம் மேவன செய்தொழுகலான்' என்று நயம்பட உரைத்தார். ஏழு பொருள்களால் யாக்கப் பெற்ற இம்மானுட யாக்கை பொய்யாயது. " இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லை " என்றார் தாயுமானார். கோல்கொண்டு வரைந்த கோட்டின் ஆயுளைக் கணக்கிட்ட அடிகளார், யாக்கையின் நிலையாமையையும் எண்ணினார். எழுந்தது மற்றொரு தொடர். " நீரில் எழுத்தாகும் யாக்கை " என்று இணைத்தார்.

அடிகளார் தெய்வநிலை கண்டவர். தான் மட்டும் வாழ விரும்பாதவர். இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தனியராய் உண்பது தகவுடையார் செயல் அல்லவே! 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுதானே ஆன்றோரது உள்ளத்துணர்வு ? எழுந்து நின்றார். நீரின் ஓரத்தே நின்று கை ஓச்சிப் பெருத்த குரலில் " நமரங்காள்!

இங்கே வம்மின் " என்று உலகவரை அழைத்தார். மன்னு உலகத்து மன்னியது செய்யவேண்டுமன்றே ? அழியும் உடம்பைக் கொண்டு அழியாத பேரின்பத்தை அடைய வேண்டுமன்றே ? அதற்கு வழியாக

" பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர் "

என்ற அமுத வாக்கை அருளிய அவ்வடிகளார், இளமை செல்வம் யாக்கை என்ற இவற்றின் நிலையாமையை உலகவருக்கு உணர்த்த உன்னினர். என்றும் அழியா இன்பத்தில் அவர்களை இருக்கச் செய்ய எண்ணினர். " நமராங்காள் ! என்னே வழுத்தாத தெம்பிரான் மன்று ?" என்ற தொடரை முன்னையவற்றோடு இணைத்து ஓர் இனிய வெண்பா யாப்பாக வெளிப்படுத்தினர்.

" நீரிற் குமிழி இளமை ; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் ;—நீரில்
எழுத்தாகும் யாக்கை ; நமராங்காள் ! என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று ?"

இங்ஙனம் இனிய இப்பாடலைச் சித்தரித்த அந்த இளந்துறவியார் யார் ? செந்திலாண்டவன் முன்னிலையிலே ஐந்தாண்டளவில் ஊமை நீக்கப் பெற்றுக் கந்தர் கலிவெண்பாவைப் பாடிய குமரகுருபர சுவாமிகளே, அந்த இளந்துறவி. அவர்களது இந்நல்வாக்கு அவர்களால் இயற்றப் பெற்ற நீதிநெறிவிளக்கம் என்னும் நூலின் வாழ்த்துப்பாடலாக வரும் முதற் பாடலாகும். இப்பாடலே அவர்களால் இயற்றப்பெற்ற சிதம்பரச் செய்யுட்கோவையிலும் காணப்பெறுகின்றது. இவ்வரிய பாடலின் பொருளை உணர்ந்து உய்வோமாக !

சன்மார்க்க சித்தியார்

தருமையாதீனப் புலவர் முத்து. சு.மாணிக்கவாசக முதலியார்

கடவுளை வழிபடும் மக்களுள்ளே பலர் அவ்வழிபாட்டு வேளையிலே தம் கண்களை மூடிக்கொண்டு கும்பிடுகின்றனர் ; பாடுகின்றனர் ; இன்ன பிற செய்கின்றனர். இக்

கண்மூடும் பழக்கம் நெடுங்காலத்தின் முன்பிருந்தே தொடர்ந்து நிகழ்கின்றது. மௌனமாக இருக்க விருப்பம் எழும்போது கண்ணை மூடிக்கொள்ளுதல் உடன் நிகழ்ச்சியாகும். தாயுமானப் பெருந்தகையாரும் 'சச்சிதானந்த சிவம்' என்ற பகுதிக்கண் (5) 'கனியேனும் வறிய செங்காயேனும் உதிர் சருகு கந்தமூலங்களேனும் கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்து நான் கண்மூடி மௌனியாகித் தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணம் இது சாமி நீ அறியாததோ? சர்வபரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே!' என்றும் பாடியருளினர். அதிலே, கண்மூடலும் மௌனியாதலும் உடனிகழ்ச்சியாதலைப் புலப்படுத்தியிருத்தல் காண்க. 'கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுண்டோ நின்னருளாம் விண்மூடின் எல்லாம் வெளியாம் பராபரமே' என்னும் கண்ணியுள், கண்ணை மூடித்திறந்து கடவுளைக் காண்டல் மெய்க்காட்சி அன்றெனல் அறிக. இங்கு, இளங்கோ அடிகள் திருவாய் மலர்ந்த 'கண்ணிமைத்துக் காண்பார் தம் கண் என்ன கண்?' என்பது நினைவில் எய்தும்.

கண்மூடிப் போற்றுதல் நன்றா? தீதா? தக்கதா? தகாததா? முன்னோர் செய்ததா? செய்யாததா? பின்னோர் கொள்வதா? தள்வதா? இத்தகைய ஆராய்ச்சியை இங்குக் கொள்ளாமல், அதன் பயனும் பயனின்மையும் குறித்து, அருளாளர் கூறுவதை அறிவிப்பதே இக் கட்டுரையிற் கொண்டதாகும். ஆதலின், அது குறித்துச் சில எழுதுகின்றேன்.

திருவாவடுதுறைத் திருமடாலயத்துப் பண்டாரச் சாத்திரங்கள், மெய்கண்ட நூற்பொருள்களை முழுதும் ஒட்டிய உண்மை நூல்கள், என்பது பலரும் அறிந்ததே. அவற்றுள், பல அச்சிடப்பட்டுள்ளன. ஸ்ரீ பண்டார சாத்திரம் என்னும் பெயரால், 1926-ல், சீகாழி முதலியார் வீட்டு வெளியீடு ஒன்று 19 நூல்களைத் தன்னுட் கொண்டிருக்கின்றது. அவற்றுள் ஒன்று 'சிவாச்சிரமத்தெளிவு' என்பது. அதில், முதல் ஏழு திருவெண்பா வினவைக் கொண்டன. அடுத்த அறுபத்துமூன்று வெண்பாக்கள் விடையும், குரு லட்சணபேதமும், சந்யாசபேதமும், துறவிகளின் பேதமும், அந்தியேட்டியும் கூறுவன. அதனைப் பின்னர் விளக்குதும்.

காமக்கூரிலே எந்தையாரிடத்தில் திருவாவடுதுறை மடத்திற் காவியுடைபெற்ற பெரியார் ஒருவர் நெடுங்காலம் இருந்தார். அவர் தூய உள்ளத்தவர். சிறந்த ஞானத்தவர். அவ்வூர்த் திருக்கோயிலிலே எப்பொழுதும் இருந்து தொண்டுபுரிந்து வழிபட்டும், அன்பர் பலர்க்கு வழிபாடு செய்யுந் திறத்தை அறிவுறுத்தியும் வாழ்ந்தவர். அவ்வூரிலே பலர் நன்னெறி யொழுக்கம் உற்றனர். யான் அறிவு முதலிய பலவற்றினும் சிறியேன். எந்தையார்க்குப் பெரிதும் வேண்டியவராயிருத்தலால், எனக்கு அவரிடத்தில் இயல்பாக அச்சமும் அன்பும் உண்டு. அழலின் நீங்காதும் அணுகாதும் அஞ்சி, நிழலின் நீங்காது நிறைந்த நெஞ்சமொடு அம்முனிவரை வழிபட்டுய்ந்த சிலருள் எனக்கு முதலிடம் உரித்து. ஒருநாள், பெரிய முனிவரைப் போல, வழிபடத் தொடங்கி, விழிபட மூடி, உருத்திராக்கமாலையைக் கையிற்கொண்டு, செபித்துக் கொண்டிருந்தேன். அதை நோக்கினர் அம் முனிவர். என் செய்கையை முடித்த உடனே, என்னை 'வா' எனப் பணித்தார். அச்சத்தொடு நெருங்கினேன். அச்சம் அச்சமாயில்லை. கனமாயிற்று. இனி எப்போதும் கண்ணைமூடிக்கொண்டு செபம் முதலிய எதையும் செய்யாதே என்று கட்டளையிட்டார். 'அப்படியே சுவாமி' என்றேன். காரணம் யாது எனக் கேட்கும் கருத்தே எனக்கில்லை. யான் அது முதலாகக் கண்ணைமூடிக்கொண்டு வழிபாடு செய்வதே இல்லை. விழுந்து வணங்கும்போது மட்டும் என்கண்கள் என்னை அறியாமல் இயைந்துவிடும். அதைத் தடுத்தும் முற்றும் விட்டபாடில்லை. இப்பொழுதும் சிற்சில காலங்களில் கண் மூடிக்கொண்டு விழுந்து வணங்குவேன். அதனால் அடையும் இடையூறு பல. இதைப் படிக்கின்றவர்கள் சிரிக்காதிருப்பார்களா? திருக்கோயில்களில் விழுந்து வணங்கும் போது என் கைகள் தட்டுத் தடுமாறி விழுந்த கனவான்கள் பலர். என் கண்மூடித்தனம் தோன்றாது, தாம் வானம் பார்த்து வந்து என் கையால் இடறுண்டோம் என்று கருதிச் செல்வர். அப்படிப் பல முறை நிகழ்ந்துளது. நிற்க. இனியாதல் அத்துன்பம் தொலையுமோ?

'சிவாச்சிரமத் தெளிவு' 'சன்மார்க்க சித்தியார்' என்னும் இரண்டு மெய்யுணர்வு நூல்களைக் கையால் எழு

திய பிரதியை வைத்திருந்தார் அம்முனிவர். ஒருநாள், என்னை அருகில் இருத்தி, அவற்றின் கருத்தை அறியச் சொல்லி வந்தார். அப்பொழுது என்பக்குவம் என்பக்குவம்? அதை உணரும் ஆற்றல் இல்லாத அபக்குவம். ஆயினும், இப்போது உண்டான ஆனந்த விளக்கத்திற்கு அதுவே சிறந்த ஞான வித்து. அவர் உணர்த்தியவற்றுள் ஒன்று இது.

சன்மார்க்க சித்தியார் கண்மூடும் மாயத்தை மறுத்து, ஆசாரியர் அநாசாரியர் இருவரையும் தெரிவிக்கும் ஓர் உயரிய மெய்ந்நூல். அதன் முதற்கண், 'என் மடமையைப் போக்கிக் கொள்ளப் புத்தியில்லேன் யான். ஞானிகளின் ஞானசாரத்தை ஆராய முயல்கின்றேன்' என்ற கருத்தைத் தோற்றி, வினாக்கள் பலவற்றை அம்பலவாண தேசிகர் கடாவியருளினார்.

'மோகமே யாதி மூன்றையும் கடிந்த
முனிவர்சென் னெறியின தியல்பும்
விதிகொள் சோபான வகையும் மெய்ச் செறிவும்
விதிப்பது மார்க்கசித் தியதே'

என்னும் அப்பண்டார சாத்திரக் கருத்துணர்த்தும் பாடற் பகுதியை ஈண்டு நோக்குதல் நன்று.

1. உடம்பு அற்று உணராமல், கண்ணைமூடி ஆய்வது ஏன்? உயிரோ பாசமாய்ப் பசுவாய்ப் பதியாகுஞ் சிறப்பினது, அது தன் உடம்பையும் நீக்கிக் கடவுளை உணர்தல் வேண்டும். அவ்வாறின்றிக் கண்மூடல் ஏன்?

2. கண்மூடியபோது அநந்நியமாயிருக்கும் கடவுள் கண்ணிமையை நீக்கின் அந்நியம் ஆவது ஏன்?

3. கண்ணைத் திறந்தார்க்குக் கதிராகி உலகிருளை ஒழிப்பாய். அழியும் உலகு சுகத்தில் மன்னும் என்று கண்ணை மறைத்துக் கடவுளை ஆய்வது ஏன்?

4. கண்ணைமூடிக் கடவுளருளைக் கருதுவதோ? நூலை ஓதியும் கேட்டும் சிந்தித்தும் தெளிவதோ? இவ்விரண்டனுள் எது நம்பனருளை நண்ணுவிக்கும் நிட்டையாகும்?

திருநீறணிவோன் அத் திருநீற்றைத் தொடும்போதே கண்ணைமூடிக்கொள்கின்றான். இடும்போதோ தன்னை

மறக்கின்றான், கடவுளும் மறைகின்றார். இது வியப்பூட்டு கின்றது.

‘அணியாய்த் திருநீ றணிவார்கள் கண்ணின்
மணியே உனைவேண்டி வந்து—பணியத்
தொடும்போது மூர்ச்சை துயரகல நீற்றை
இடும்போ தகல்வாய் இதென் ?’ (6)

இதில் தொட்டு மூர்ச்சை அடைவது நீறிடுவோர் செயல். அகல்வது ஆண்டவன் (குரு) செயல்.

‘நீணாட் டியானித் திடினும் உடலுயிர் நீதிசற்றும்
காணார் கண்மூடிப் பயன்என் கொலோ கலையால் அருளைக்
கோணா துணர்த்தும் குருவே அறிவைக் கொடுப்பன் இன்பம்
நாணா தநிட்டை என்றான் சிவாய நமகுருவே.’

என்னும் நிட்டைவிளக்கத் திருப்பாடலையும் (18) ஈண்டு நினைத்தல் நன்று.

இதனால், செபமோ, தியானமோ, நிட்டையோ பிறவோ செய்யும் வழிபாட்டில் விழிபாடு (கண்படல்) சிறிதும் வேண்டாததாகும் என்பது விளங்கும்.

இத்திருப்பாடலில் ‘சிவாய நம குரு’ என்றது, திருவாவடுதுறையின் முதலாசிரியர் ஆகிய நமச்சிவாய மூர்த்திகளை என்று உளங்கொள்ளல் வேண்டும். ‘பஞ்சாக்கர தேசிகர்’ என்னும் மரபுணர்ந்தார்க்கு இது விளங்கும் எனினும் பிறர்க்கு இவ்வாறு எழுதப்படுவதாயிற்று. ‘இமையினைக் கூடல் இன்றித் தெரிவே தெரிநிட்டை என்றான் சிவாய மெய்த் தேசிகனே’ (ஷை. 19) என்றதும் உணர்க.

‘அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு’
‘இமையோர் சிரந்தனிற் பொலியும் கமலச் சேவடியாய்’

என்னும் திருவாசகத்தையும் இங்கே எண்ணியுணர்தல் சிறந்தது.

கண்ணைமூடி வழிபடும் வேளை எதுவும் இல்லை. உருவக் காட்சியிலும் உணர்வுக் காட்சியிலும் இல்லை. உலகக் காட்சியிலும் பெருகி வருத்துகின்றது கண்மூடு வழிபாடு. (8) கண்ணைத் திறந்திருப்பினும் மூடியிருப்பினும் உயிரினது உணர்வுக் காட்சியில் நிகழும் வழிபாட்டிற்கு

ஒன்றும் தொடர்பில்லை. "ஊனினை நீக்கி உணர்பவர்க்கு அல்லது தேனமர் பூங்கழல் சேர வொண்ணுதே" என்றது திருமந்திரம். 'துவாதசாந்தப் பெருவெளியில் விழித் துறங்குந் தொண்டர்' என்றது எங்கள் தருமையாதீனத்து முனிவர் பெருமான் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கு. இதனால், 'விழித்துறங்குந் தொண்டர்'க்குக் கண்மூடிச் செய்யும் வழிபாடு செய்யும் பழக்கம் இல்லை என்று தெளியலாம். கண்ணை மூடத் தொடங்கியதும், பாராத உலகெல்லாம் பார்க்க நேர்ந்து, தீராத துன்பமாய், வழிபாடே கெட்டுவிடும். அதனால், உடலுறுப்புக்களை அடல்வேண்டா. உடலின் நீங்கி, உளத்தின் நீங்கி, உயிரின் உணர்வில் வழிபாடு செய்வதே உண்மை வழிபாடு. திருமுறைகளில் இதனை விளக்கும் பாடல்கள் பல உள்ளன. அருணகிரிநாதர், 'நின்னை உணர்ந்துணர்ந்தெல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டது இவ்வுடம்பு' என்றதொரு சிறந்த வழிபாடு விழிபாடு இன்றிச் செய்வதே யாகும். ஆதலின் கண்மூடும் பழக்கம் பயனுடையதன்று என்பது அருளாளர் கருத்து எனல் நன்கு விளங்கும்.

கந்தரனுபூதி

ம. பா. தியாகராய முதலியார், B. A.

"ஆடும்பரிவேல் அணிசேவலெனப்
பாடும்பணியே பணியாயருள்வாய்"

என்ற முதற்பாடலினிரண்டடிகள், ஆடும் பரியாகிய மயிலையும், வேலையும், சேவலையும் பாடித் துதிக்கும் பேற்றை விழைந்து நிற்கின்றன. பின்னிரண்டடிகளால் அம்மூப் பொருள்களுக்குரிய அறுமுகக் கடவுளை, கயமுகாசுரனைக் கொன்ற யானைமுக விநாயகக் கடவுளின் சகோதரனே என விளித்துப் போற்றப்படுகிறது. அறுமுகக் கடவுளைத் தியானிக்கப்படினும், அவருடைய அண்ணன் யானை

முகவனுடைய அருளுருவமே இப்பாடலின் மனனத்தால் தென்படுகிறது. தென்படுதலே ஏனைய ஐம்பது பாடல்களிலும் சித்தி பெறுதற்கருள் பாலித்தலொக்கும். அவ்வனுபவத்திற்கிடர்ப்பாடு நேரின் புண்ணிய கருமக் குறைவென்றே கருதவேண்டும்.

மயிலும் சேவலுமாகப் பிளக்கப்பட்ட மாமர உருவம் அசுர சம்பத்தோடுகூடிய சூரபன்மனுகையால், அசுர சம்பத்தினழிவு இவ்வாருக ஏற்பட்டதின் தத்துவத்தை ஆராய்ந்து தெளிவுபெற வேண்டும். அதைக் கூறுபடுத்தியது ஞானவேலாகும். ஆடும் பரியாகிய மனம் தன்னுடன் கலந்துள்ள எண்ணங்களால் பிணிக்கப்பட்டு ஜகமாயைத் தோற்றத்தில் ஜீவர்களைப் பிரமை கொள்ளும்படி செய்கிறது. அது தேவர்கள் வருந்தியதற்கொப்பாம். "அறிவு தன்னினை வொடுங்கூடில் உயிர் ஜகமுளவாம்; பிறிவில் பேதா பேதங்களின்றி நெறியுறத்தானே தன்னிடத்திருக்கும்" என்ற திருப்போரூர்ச் சந்நிதிமுறையில் "சிற்சுகம்" என்னும் பதிகத்தின் ஒரு பாடலில் வரும் சிதம்பர சுவாமிகளின் வாக்கை ஈண்டு அத்தத்துவத்தை உணர்த்தும் சான்ருகக் கொள்ளலாம். அறிவெனும் ஞானச் சுடர்வேல் அப்பிணிப்பைக் கூறுபடுத்த "ஜோதி இளம்பரிதி நூருயிரம் போல" முருகனுருவம் தோன்ற, வள்ளியம்மையாகிய ஆன்மா அதைக்கண்டு மோகித்து ஒன்றும் தன்மையை ஆடும் பரியாகிய மயிலையும், வேலையும், காவலாக விளங்கும் சேவற் கொடியையும் பாடித்துதிக்கும் பயனளிக்கும். அப்பேற்றை விக்கினமின்றியடையக் கணபதியை ஒருவாறு நினைந்து பாடியது இம் முதற்பாடலாகும். மற்று இன்னொரு பேருண்மையையும் இம் முச்சொற்ருெடர், மயில் வேல் சேவல் என்ற முறைமையில் உணர்த்துகிறது. இடையிலுள்ள ஞானவேல் இறைவனுடைய அருட் சக்தியை உணர்த்துகிறது. அவ்வருளால், ஆடும் பரியாகிய மனம் வாகனமாக அமைதியுறப் பெற்று, ஒளிகாண் சேவற் கொடியாக உயிர்நினைவு, பரன்நினைவாக உயர்த்தப்படும் யோக தத்துவத்தையும் அம்முறைமை உணர்த்துகிறது. அச்சிவயோகத்தின் விளக்கம் குருமுகமாகப் பெற்றுய்தல் வேண்டுமென்ற அவசியம் கருதி இங்குக் குறிக்கப்படவில்லை.

இப்பாடலுக்குரிய யந்திரம் பின்வருமாறு.



மூலமந்திரம் : ஆம். ஊம். அவ்வும் நமஸ்தே

நைவேத்தியம் : பால். பழம். சர்க்கரை.

மேற்படி யந்திரத்தை ஒன்பது அங்குலச் சதுரச் செப்புத் தகட்டில் எழுத்துப் பிழையற வரைந்து, ஒரு நல்ல நாளில் அபிஷேக ஆராதனைகள் செய்து தூபதீபங்காட்டி இப்பாடலை மூலமந்திரத்துடன் 108 தரம் மனனம் செய்து தூய இடத்தில் பிரதிஷ்டைசெய்து வைக்கவும். பின்னர் பிரதிதினம் 108 தரம் காலை மாலை ஆசாரத்துடன் மனனம் செய்துவரின், அன்பர்களின் பரிபக்குவத்திற்குத் தக்கபடி சில தினங்களிலோ, பல தினங்களிலோ, அத்தி முகத்தண்ணலின் அருளுருவ தரிசனம் கிடைக்குமென்பதை அனுபவத்திற் காணலாம்.

எது வாழ்க்கை?

(வித்துவான் - செ. வேங்கடராமச் செட்டியார்,
தமிழாராய்ச்சி விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக்கழகம்)

எது வாழ்க்கை? என்ற கேள்விக்கு விடை கூறுவது எளிதல்ல, இது தான் வாழ்க்கை என்று வரையறுத்துச் சொல்லக் கூடிய நிலையில் மக்கள் மனநிலை ஒன்றுபட்டதாக இல்லை. மக்கள் முகங்கள் எல்லாம் ஒன்றோடொன்று ஒவ்வாதனவாய்ச் சிறிது சிறிது வேறுபட்டே இருப்பது போல, அவர்களுடைய எண்ணங்களும் குறிக்கோள்களும் வேறுபட்ட இயல்பினவே யாகும். எனவே, அவர்கள் வாழ்க்கை யென்று எதைக் கருதுகின்றார்கள் என்பது பொதுவகையால் சொல்லும் தன்மையதன்று. மக்கள் வாழ்வின் குறிக்கோள், சிறப்பு வகையால் அவர் அவர் தகுதிக்கேற்பப் பலதிறப்படுவதாக உள்ளது. ஒன்றற் கொன்று வேறுபட்டுக் காணப்படும் மக்கள் முகங்களில் எல்லாம் கண்ணும் மூக்கும் காதும் வாயும் ஆகிய உறுப்புக்கள் பொதுவாக அமைந்திருத்தல் போல மக்கட்கெல்லாம் பொதுவான குறிக்கோள்களும் உண்டு.

எடுத்துக்காட்டாக, உணவும் உடையும் தேடுவது எல்லா மக்கட்கும் பொதுவான குறிக்கோளாதலை நோக்குக. காலத்திற் கேற்ப—இடத்திற் கேற்ப—செல்வ நிலைக் கேற்ப—உணவும் உடையும் வேறுபட்டிருப்பினும் அற்றங்காக்கும் உடையும், பசிப் பிணி தீர்க்கும் உணவும் எல்லா மக்கட்கும் தேவை என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். எனவே மக்கள் மனநிலைக் கேற்பச் சிறப்பு வகையால் வேறுபடுகின்ற வாழ்வின் குறிக்கோள் பலவிருப்பினும் பொதுவகையான் ஒன்று படுகின்ற வாழ்வின் இன்றியமையாக் குறிக்கோள்களு முண்டு என்பதை யுணரலாம். இங்ஙனம் எல்லோர்க்கும் பொதுவகையாக அமைந்த வாழ்க்கைக் குறிக்கோளும் மக்களுடைய பருவத்திற்கேற்ப வேறுபடுதலைக் காண்கின்றோம். உயர்ந்த குறிக்கோளுடன் தம் வாழ்க்கையை நடாத்தி யுயர்நிலை பெற்ற திருநாவுக்கரசர் பிறர் நிலையைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு,

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை நல்லார்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோ ளிலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே.

என்று இறைவனிடம் முறையிடுகின்றார். இப்பாடலில், அப்பர் தம் பாலப் பருவமும் காளைப்பருவமும் முதுமைப் பருவமும் குறிக்கோள் இலாமல் கழிந்துவிட்டதாகக் குறித்துள்ளமை காண்க. இதை நோக்கும்போது ஒவ்வொருவர் வாழ்விலும், பாலப்பருவத்துக் குறிக்கோளும் காளைப் பருவத்துக் குறிக்கோளும் முதுமைப் பருவத்துக் குறிக்கோளும் வேறுபட்டன வாகவே இருக்கும் என்ற உண்மை புலனாகும்.

உயிர் உடம்போடு கூடி வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது என்றாலும், உணவுண்ணவே வாழ்கின்றேன் என்று யாரும் பெரும்பாலும் நினைப்பதில்லை. கள்ளம் அறியா உள்ளத்தோடு சின்னஞ்சிறார் விளையாடுகின்றார்கள். வீட்டு முற்றத்தில் பரப்பியுள்ள புதுமணலில் அச்சிறார் வீடு கட்டுகிறார்கள். அவ்வீட்டில் சமையல் அறையும் உண்ணும் அறையும் உறங்கும் அறையும் குளிக்கும் அறையும் மணஞ் செய்தற்குரிய பெருங்கூடமும் திண்ணையும் முன்றிலும் எல்லாம் குறைவின்றி அமைக்கின்றார்கள். பிறகு அவர்களுள் ஓராண் மகனையும் ஒரு பெண் மகளையும் மணமக்கள் ஆக்குகின்கிறார்கள். மணம் நடைபெறுகின்றது. வாத்தியக்காரராக அவர்களுள் சிலர் ஆகின்றனர். அவர் வாயும் கையுமே அவ்வாத்தியங்கள். பூம் பூம், டம் டம், பீப்பீ என்ற ஒலிகள் எழுகின்றன. மணமக்கள் ஏதோ ஒரு மாலையை மாறி மாறி யணிந்து கொள்கின்றனர். மணமகன் மணமகள் கழுத்தில் ஏதோ ஒன்றைத் தாலியாகக் கட்டுகின்றான். மணமுடிகிறது. திருமணத்திற்கு வந்தவர்கள் தாம்பூலம் உண்டி யெல்லாம் கற்பனையுலகத்தில் பெறுகின்றனர். இந்நிலையில் அச்சிறுவரில் மணமகளாக நடித்த சிறுமியின் தாய் வந்து, 'பொழுதுக்கும் இந்த விளையாட்டா? சாப்பிட வேண்டாமா?" என்று கடிந்து கூறிச் சிறுமியை யழைத்துச் சென்றுவிடுகின்றார்.

இங்கு இச்சிறுவர்களின் குறிக்கோள் என்ன? உண்டற்குரிய இனிய பண்டங்களை மிக விரும்பும் இக்குழந்தைகள்கூட உண்ணுதல்தான் வாழ்வின் குறிக்கோள் என்று கொள்ளவில்லை. விளையாட்டே அவர்கள் குறிக்கோள் ஆகின்றது. அதுவே அவர் மனத்தை மகிழ்விக்கின்றது. அக்குழந்தைகட்குப் பசிக்குமே யென்று தாய்தான் வந்து வற்புறுத்தி அழைத்துச் செல்ல வேண்டியுளது. ஆகவே அவ்விளையாட்டை விடுத்து உணவுண்ணச் செல்லவும் மறந்துவிடுகின்றார்கள் சிறுவர்கள். இதை நோக்கும்போது பாலப் பருவத்துக் குறிக்கோள் விளையாட்டே என்பதும் பசி தீர உண்பதன்று என்பதும் விளங்கும்.

ஆண்டுகள் பல செல்கின்றன. முன்னர் மணமகனாகிய அச்சிறுவனே காளைப் பருவம் எய்துகின்றான். முன் மணமகளாக நடித்த அச்சிறுமியும் மங்கைப்பருவம் எய்துகின்றாள். எழில் மிக்க வடிவினராய்த் திகழ்கின்றனர். அவ்விருவரும், ஊழ்வலியால் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். பண்டே பழகிய அன்பும் இன்று காணப்படும் எழில் மிகுவடிவும் காதல் முளையை இருவர் உள்ளத்தும் தோற்றுவிக்கின்றன. உள்ளங்கள் இரண்டும் ஒன்றுபடுகின்றன. ஒருவரை யொருவர் இன்றியமையாதவர்கள் ஆகின்றனர். ஆயின் மீண்டும் மீண்டும் காண்டல் எளிதாகவில்லை. பெண்ணின் தாய், பெண்ணை வெளியில் தலைகாட்டாதபடி செய்கின்றாள். அக்காதலியைக் காண அக்காதலன் துடிக்கின்றான். எங்கும் அவள் உருவ வெளிப்பாட்டையே காண்கின்றான். உணவை மறக்கின்றான். உறக்கம் துறக்கின்றான். இப்பொழுது அக்காளையின் குறிக்கோள் என்ன? சுவை மிக்க உணவா? அமைதி மிக்க உறக்கமா? விளையாட்டா? வினையா? இல்லை. இல்லை. எழில்மிக்க அந் நங்கையைத் தனக்கே யுரிய மனைவியாகப் பெற வேண்டும் என்பதே அவன் குறிக்கோள், இந்த நிலையில் அவன் என்ன சொல்கின்றான்?

"பெருந்தோட் குறுமகள் சிறுமெல்லாகம்
ஒருநாள் புணராப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே" (குறுந் - 280)

என்று சொல்கின்றான். அக்காதலியை ஒரு நாள் தழுவப் பெற்றால் மறுநாள் அரைநாள் வாழ்க்கையும் வேண்டாம் என்கின்றான். மனித வாழ்வின் பயன் மாண்பு மிக்க மனைவியைப் பெறுவதே என்று அத்தலைவனுக்குத் தோன்று கின்றது.

என்னின் யாரும் எனக்கினியாரில்லை என்ற நிலைபோய், என்னினுமினியாள் ஒருத்தியுள்ள ; அவளை 'ஒரு நாள் தழுவப் பெற்றுவிட்டால் என் வாழ்க்கை பயனுடையதாகி விடும் என்று எண்ணும் நிலை வந்துவிட்டது. இன்று இவ்வாறு எண்ணுகின்ற இவனே பிள்ளைமைப் பருவத்தில் விளையாட்டே வாழ்வின் குறிக்கோள் என்று கொண்டு உணவையும் மறந்து விளையாடி மகிழ்ந்தவனே யாவன். அன்று இத்தகைய குறிக்கோளை யெண்ண அவன் வயது இடந்தரவில்லை. கள்ளமில்லா உள்ளத்தோடு விளையாட் டையே விரும்பி வாழ்ந்தான். இன்றோ அவன் விளை யாட்டை விரும்பவில்லை. உண்மையான திண்மையான காதலில் கருத்துடையன் ஆனான். பெருமையும் உரனு முடைய அத்தலைவன் தன்கருத்தைத் தாய் தந்தையர்கட்குப் புலப்படுத்தி அவர்கள் துணைகொண்டு உருவினும் திருவி னும் பண்பினும் நண்பினும் சிறந்த அந்நங்கையை மணந்து கொள்கின்றான். நினைத்த இன்பத்தில் திளைத்து வாழ் கின்றான். தனக்கென வாழ்ந்த தனி வாழ்விலிருந்து தன் மனைவிக்கென வாழும் நிலையை யெய்தினான். ஆண்டுகள் சில செல்கின்றன. இருவர் மனமும் மகப்பேற்றையே சிறந்த பேறாக எண்ணுகின்றன. எண்ணியாங்கு நல்ல புதல்வனைப் பெறுகின்றனர். தாய் தந்தையர் ஆகின்றனர். ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொண்ட அவ்விருவர் அன்பும் வளர்ந்து குழந்தையின்பால் நிலைபெறுகின்றது. குழந்தை யின் வாழ்வே தம் வாழ்வு என எண்ணி வாழ்கின்றனர். அக்குழந்தையைக் காப்பாற்ற உயிர்விடவும் அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர்.

அக்குழந்தை வளர்ந்து விளையாடத் தொடங்குகின்றது. ஒத்தவயதுடைய குழந்தைகளோடு கூடி விளையாடுகின்றது. அவ்விளையாட்டை அவன் தாய் தந்தையர் ஊன்றிப் பார்க் கின்றனர். அவ்விளையாட்டில் திருமணம் நடைபெறுகின்றது. அம்மணத்தைக் கண்டு அப்பெற்றோர் சிரிக்கின்றனர்.

சிரிப்புக்கிடையில் தலைவன் தன் மனைவியை நோக்கி, ‘ நாமும் அப்படி விளையாடலாமா ?” என்றான். வெட்கமாக இல்லையா என்று பதில் வந்தது. என் வெட்கம் ? இவர்களும் இளமைப் பருவத்தில் இவ்வாறு விளையாடினவர்கள் தாமே ? இன்று வெட்கப்படக் காரணமென்ன ? பிள்ளைகள் செய்துகொள்வது பொய் மணம் என்றும், தாங்கள் மணந்து வாழும் இல்வாழ்க்கையே யுண்மையானதென்றும் எண்ணுகின்றனர். அறியாப் பருவத்துச் சிறுவரின் பொய்யான மனையும் பொய்யான மணமும் பொய்யான சோறும் காண்கின்றபோது, மெய்யான இல்வாழ்க்கை நடத்துவதாக நம்பியிருக்கின்ற தலைவனும் தலைவியும் சிரிக்கின்றார்கள். இன்று தாங்கள் நடத்தும் மெய்யான இல்வாழ்க்கையை நோக்கத் தம் பழைய பொய்யான விளையாட்டு மனை வாழ்க்கையை நினைத்தால் சிரிப்பு வருகின்றது. நாணம் பெருகுகின்றது.

ஆண்டுகள் பல செல்கின்றன. இல்வாழ்க்கையில் பயின்ற பயிற்சியால் அன்பு முதிர்கின்றது ; அறிவு முதிர்கின்றது; அழகிய உடம்பும் முதிர்கிறது. இருவரும் இளமை முதலாக வாழ்ந்த வாழ்க்கையைச் சிந்திக்கின்றார்கள் உலகத்துக் கண்டும் கேட்டும் பழகிய பிறர் வாழ்க்கைகளையும் சிந்திக்கின்றார்கள். தனக்கென வாழ்ந்த தனிநிலை வாழ்க்கை இழிந்ததாகத் தோன்றுகின்றது. உறவினர்க்கென்று வாழ்ந்த அன்பு வாழ்க்கையும், நண்பர்கட்கென வாழ்ந்த பண்பு வாழ்க்கையும், தன்னல நோக்கமுடையவாகவே காணப்படுகின்றன. இல்லறத்தில் வழுவாது வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கை, முன்னைய தனி வாழ்க்கையினும் சிறந்ததேயாயினும், தொடர்புடையாரிடத்துமட்டும் அன்பு செலுத்தும் வாழ்க்கை யாதலின் அவ்வாழ்க்கையும் இழிந்ததாகவே தோன்றுகிறது.

மேலும், இவ்வுலகத்துப் பிறந்த எல்லோரும் என்றேனும் ஒரு நாள் இறக்கின்றனரே யன்றி நிலையாக இருக்கின்றார் யாரையும் காணவில்லை.

“ கருவினுள் அழிவ தாயும் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனாய் அழிவ தாயும்
தருணனாய் அழிவ தாயும் தான்நரைத் தழிவ தாயும்
உருவமே அழிவே யானால் உள்ளபோ தேபார் உய்ய !” (சித்தியார்)

என்றாற் போன்ற மேலோர் வாக்கை நோக்குகின்றார்கள். தன்னலமற்ற அன்பு—தொடர்பு கருதாத அன்பு—'எவ்வுயிரும் பராபரன் சந்நிதி' 'இலங்கு முயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்' என்ற பொதுநோக்கம் பெறவேண்டுமானால் அருள் நெறி — தவநெறி என்ற ஒன்றே வழி என்பதையுணர்கின்றனர். வேண்டுதல் வேண்டாமை யில்லாதான் தாளை நீடு நினைக்கின்றார்கள். தாமும் விருப்பு வெறுப்பு இல்லாத மனநிலையைப் பெறுகின்றார்கள். இவ்வுலகில் எல்லோரும் நண்பர்கள். எல்லோர்க்கும் தொண்டு செய்வதே இறைவனுக்குச் செய்யுந் தொண்டு ஆகும் என்று எண்ணுகின்றார்கள். அருளால் அவர்கள் அகமலர்கின்றது. தெருளால் அவர்கள் முகமலர்கின்றது. அருள் நெறியே அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகின்றது. அந்நெறியில் தம் வாழ்க்கையை நடாத்துகின்றார்கள்.

இந்நிலையில், காளையாய்க் கழிந்த நாளின் குறிக்கோளையும் பாலனாய்க் கழிந்த நாளின் குறிக்கோளைப் போலவே பழுதுடையது எனத் தெளிந்து சிரிக்கின்றார்கள். இந்த நிலையை எண்ணிக் கவிச்சக்கரவர்த்தியாம் கச்சியப்ப முனிவர், தணிகைப் புராணத்தில் எழில் பெற இயம்பியிருப்பதைக் காண்போம்.

"சிற்றில் புனைந் தாடுநர்பால் செறிந்தாடும் விளையாட்டுப்
பொற்றமனை யறம்புரிகால் புந்திசெயின் நகைதரல்போல்
அற்றமிலா வில்லறமென் றாதரிக்கப் படுவதருள்
பற்றலுறும் போதுன்னின் பழுதெனத் தோற்றுவதன்றே"

என்பது காண்க. இப்பாடல், தவமிகச் செய்து இராவணனைக் கொல்லக் கணைபெற விரும்பிய இராமபிரானுக்குச் சிவபிரான் கூறுவதாக அமைந்தது.

வாழ்வின் நோக்கம் ஒருவர்க்கே பருவந்தோறும் வேறுபடுகின்றதாயினும், இம்மூவகையான பருவமும் ஒருவர் வாழ்க்கையில் அமைந்துள்ளமை உண்மையாகும். சிறு பருவத்தின் விளையாட்டு வாழ்க்கையும், காளைப்பருவத்து மணவாழ்க்கையும், காமஞ்சான்ற கடைக்கோட் காலத்து உற்ற நோய் நோன்று உயிர்க்குறுகண் செய்யாது அனைத்துயிர்க்கும் அருள் தாங்குகின்ற தவ வாழ்க்கையும் ஆகிய மூன்று வகையான வாழ்க்கையும் சேர்ந்ததே முழு வாழ்க்கையாகும்.

கள்ளமில்லா விளையாட்டுப் பருவத்து உண்மையான இல்வாழ்க்கை வாழமுடியாது என்பது எப்படி உண்மையோ, அப்படியே மணவாழ்க்கைக்குரிய காளைப் பருவத்துத் தவ வாழ்க்கையும் வாழ்தல் அரிதேயாகும். இது கருதியே தெய்வப்புலவர் திருவள்ளுவரும் முதற் கண் இல்லறவியலைக் கூறிப் பின்னர்த் துறவற வியலைக் கூறியுள்ளார். இந்நெறிக்குச் சிலர் விலக்காக இருக்கலாம்.

புகை பிடிக்க உரிமையில்லாத வாழ்க்கை வேண்டாம் என்று ஊமத்தங்காயைத் தின்று உயிர் துறக்க முயன்ற காந்தியண்ணலின் இளமைப் பருவ வாழ்க்கையும், தந்தையார்க்குத் தொண்டு செய்யுங்காலும் அத்தொண்டினை விடுத்து மனைவிபால் செல்ல விரைந்த அவர் தம் காளைப் பருவ வாழ்க்கையும், காமஞ்சான்ற கடைக்கோட் காலத்து மனைவியையும் தங்கைபோலக் கருதி இன்பத்தை விரும்பாது பகைவர்க்கும் அன்பு காட்டி எல்லோர்க்கும் தொண்டு செய்து அருள் நெறியில் வாழ்ந்த அவர்தம் முதுமை வாழ்க்கையும் இங்கு நினைவுகூர்தல் பொருத்தமுடையதாகும்.

இதுகாறும் கூறியவாற்றால் இல்வாழ்க்கை யொன்றே வாழ்வின் முழுத்தன்மை யுடையதன்று என்பதும், அனைத்துயிர்க்கும் அருள் தாங்கும் தவ வாழ்க்கையோடு சேரும் பொழுதே அது முழு வாழ்க்கையாகின்றது என்பதும்; அவ்வாழ்க்கையே உண்மை வாழ்க்கையாகும் என்பதும் விளங்கும்.

அஷ்டப் பிரகரணம்

தி. கி. நாராயணசாமி நாயடு

சிவாகமங்களின் ஞானபாதக் கருத்துக்களை வடமொழியில் விளக்கும் சார்புநூல். சித்தாந்த சாத்திரத் தமிழ் நூல்களில் கூறப்படாத பல அரிய கருத்துகளை இவற்றில் தெளிவாகக் காணலாம். சித்தாந்த முடிபை அறிய விரும்புவோர் இவற்றை ஆராய்வது கடமை. வடமொழி மூலமும் தமிழ் உரையுமாக இதனைத் தேவக்கோட்டைச் சிவாகம சங்கத்தினர் அச்சிட்டனர். அவை :—

1. தத்துவப் பிரகாசிகை : 76 *செய்யுள். 36 தத்துவங்களின் பெயர், அவை தோன்றி ஒடுங்கும் முறை, இன்ன பிற விளக்குவது. ஆசிரியர் - அரசர் போஜதேவர். இவரது ஆசிரியர், தமது பெயரால் பத்ததி இயற்றிய உத்துங்க சிவாசாரியர். வித்யாரண்யர், தமது சூதசங்கிதை விரிவுரையில் இந்நூலை எடுத்து ஆள்கின்றார். இதற்குக் குமாரதேவர் உரையும் (திருவனந்தபுரம் வெளியீடு) அகோர சிவாசாரியர் விரிவுரையும் உண்டு.

2. தத்துவ சங்கிரகம் : 58 செய்யுள். ஆசிரியர் சத்தியோ ஜோதி சிவாசாரியர், ரௌரவ ஆகமத்திற்கு சுவிருத்தி உரை செய்தவர். அந்த ஆகமத்தைத் தழுவி இது செய்யப்பட்டது. இதற்குட்பட்ட நாராயணகண்டர் எழுதியவிரிவுரையைச் சுருக்கி அகோர சிவாசாரியர் எளிய உரை வகுத்தார்.

3. தத்துவத் திரய நிர்ணயம் : 32 செய்யுள். கடவுள் உயிர் உலகம் என்ற முப்பொருளை விளக்குவது. சுவாயம்புவ ஆகமத்தைத் தழுவியது. ஆசிரியர் சத்தியோ ஜோதி சிவாசாரியர். அகோர சிவாசாரியர் பேருரை இதற்கு உண்டு.

4. இரத்தினத் திரயம் : 319 செய்யுள். விந்து, சிற்சத்தி, சிவம் மூன்றையும் இரத்தினமாக உருவகம் செய்வது. சிவனுடைய கிரியாசத்தி விந்து என்பாரை மறுத்துப் பரிக்கிரக சத்தி, சடசத்தி என்று நிலைநாட்டி, சிற்சத்திக்குப் பரிணாமம் கூறுவாரை மறுத்து, சிற்சத்தியைக் காரணமாகக் கொண்டு கடவுள் எல்லாவற்றையும் செய்கின்றார் என்று கூறுவது. ஆசிரியர் ஸ்ரீகண்ட சிவாசாரியர். அகோர சிவாசாரியர் பேருரை உண்டு.

5. யோக காரிகை : 146 செய்யுள். உயிருக்குப் போகம் சுகம் முதலியவற்றின் அறிவு, அதற்குச் சாதனமாம் நிலம் முதலிய முதல்களின் தோற்றவரலாறு விளக்குவது. ஆசிரியர்-சத்தியோ ஜோதி சிவாசாரியர். இதற்கு அகோர சிவாசாரியர் பேருரை உண்டு.

6. நாத காரிகை : 25 செய்யுள். பொருள்களின் அறிவு, எழுத்து : சொல், சொல்லுக்கு அடிப்படையாய்த்

---

*ஸ்லோகம்

தொன்மையாயுள்ள பொருளை உணர்த்தவல்ல ஒலி (ஸ்போடம்) முதலியவற்றால் உண்டாகும், என்பாரை மறுத்து நாதத்தால் உண்டாகும் என்று நாட்டுவது. ஆசிரியர் பட்டராம கண்டர். இவர் நாராயண கண்டரின் மகனார். அகோரார் பேருரை உண்டு.

7. மோட்ச காரிகை: 157 செய்யுள். சித்தாந்த முத்தியை முடிவு செய்யும் முறையில் பிறர் கூறும் முத்திகளைக் காரணம் காட்டி மறுப்பது. ஆசிரியர் சத்தியோ ஜோதி சிவாசாரியர். பட்டராமகண்டர் பேருரை இதற்கு உண்டு.

8. பரமோட்ச நிராச காரிகை: 60 செய்யுள். பிறர் கூறும் பக்கம் அனைத்தையும் கூறி, அளவை முறையில் மறுப்பது. ரௌரவ ஆகம சூத்திரம் 2½யை அடிப்படையாகக்கொண்டு விளக்குவது. ஆசிரியர் சத்தியோ ஜோதி சிவாசாரியர். பட்டராமகண்டர் பேருரை இதற்கு உண்டு.

மெய்கண்டதேவர்*

தென்னிந்தியாவிலே உள்ள நாடுகளில் திருமுனைப்பாடி நாடு ஒரு தனிப்பெருமை உடையது. அந்நாட்டிலேதான் நம் திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருஅவதாரம் செய்தார்கள். அத்தகைய சிறந்த நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரிலே சைவவேளாளர் குலத்திலே அச்சுதகளப்பாளர் என்னும் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் திருமணஞ் செய்து பலவாண்டுகள் சென்றும், அவர்க்கு மகப்பேறில்லதாயிற்று.

> " மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு."

என்று தெய்வப்புலவர் அருளிய திருக்குறளுக்கிணங்க மகப்பேறு வாய்ப்பின் அன்றோ, இல்லறம் நல்லறமாகும்? அங்ஙனம் இல்லாமையின் பெரிதும் மனம்நொந்து, அவர்

*வழக்கறிஞர் வே. நாகலிங்கம் J. P., U. M. அவர்களின் வானொலிப்பேச்சு.

தங் குலகுருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரை அடைந்து தம் குறையை முறையிட்டனர். அப்போது அவர், திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த தேவாரத் திருமுறையினைப் பூசித்துக் கயிறு சார்த்திப் பார்த்தனர். அப்போது,

> " பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
> வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
> வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
> தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே "

என்னும் திருப்பதிகப்பாட்டு அகப்பட்டது. திருவெண் காட்டுத் திருக்கோயிலின் கண்ணுள்ள மூன்று திருக்குளங் களில் முறைப்படி நீராடுபவர் பிள்ளைப்பேற்றோடு அவர் எண்ணியவெல்லாம் எய்துவரென்றும், அவரைப் பேய்கள் முதலியன பிடியாவென்றும், அவரை விட்டு எல்லாத் தீவினைகளும் நீங்குமென்றும், அவற்றைப்பற்றிச் சிறிதும் ஐயுறவேண்டாவென்றும் அத்திருப்பாட்டுக் கூறுகின்ற தென்று அருணந்தி சிவாச்சாரியார் அச்சுதகளப்பாளருக் குக் கூறி, அவரை அவர்தம் மனைவியாரோடு திருவெண் காடு சென்று, முக்குளநீரிலே மூழ்கி, அத்திருக்கோயிலை முறைப்படி வணங்கி வந்தால், மகப்பேறு உண்டாவது திண்ணமென்று வற்புறுத்திச் சொல்லினர். அவர் சொல் லின்படி அச்சுதகளப்பாளரும் தம் மனைவியாரோடு திருவெண்காட்டுக்குச் சென்று, தம் ஆசிரியர் சொல்லிய வண்ணம் வழிபாடு ஆற்றிவருநாளிலே, அவர்தம் மனைவியார் கருவுற்றனர். உற்று, உரியகாலத்திலே மகவு பிறந்தது. திருவெண்காட்டுப் பெருமான் திருவருளால் அம்மகவு பிறந்தமையால், அதற்குச் சுவேதவனப்பெருமாள் என்று பெயரிட்டார்கள். அச்சுதகளப்பாளரும் அவர்தம் மனைவி யாரும் திருவெண்காட்டினின்றும் அவ்வம்மையார் பிறந்த ஊராகிய திருவெண்ணெய்நல்லூருக்கே சென்று, அங்கே தான் அவ்வாண்மகவு பிறந்தபடியால், அம்மகவும் தாயாரும் திருவெண்ணெய்நல்லூரிலேயே இருந்து வந்தனர். அங்கு வளர்ந்துவரும் நாளில் நம் குழந்தையாகிய சுவேதவனப் பெருமாள் மற்றைய பிள்ளைகளைப்போலில்லாமல், அதிதீவிர புத்தியுடையவராய்க் காணப்பட்டனர். நம் சுவேதவனப் பெருமாள் தாம் முன்னைப்பிறவிகளிற் செய்த தவத்தின்

பயனுக, இரண்டு ஆண்டுகள் முடிவெய்தியதும், சாமுசித்த நிலை எய்தினர். இங்ஙனம் இருந்துவரும் நாளில் திருக் கயிலாயத்திலிருந்து சனற்குமார முனிவரின் ஞானப்புதல் வராகிய சத்தியஞானதரிசனிகளிடம் உபதேசம் பெற்ற பரஞ்சோதிமுனிவர் என்பார், பொதியமலைக்கு அவ் வழியாகச் சென்றபோது, நம் சுவேதவனபெருமானைக் கண்டு, அவர்தம் பக்குவநிலையுணர்ந்து, அவருக்கு அருளுப தேசம் செய்து, தம் ஞானத்தந்தையின் திருப்பெயராகிய மெய்கண்டார் என்னும் பெயரையும் சூட்டினர்.

மெய்கண்டார் திருவெண்ணெய்நல்லூரின்கண் எழுந் தருளிய பொல்லாப்பிள்ளையாரிடம் கலைஞானம் அனைத்தை யும் கேட்டுத் தெளிந்துகொண்டார். பின்பு தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் திருமொழிக் கிணங்க, திருவெண்ணெய்நல்லூரின் கண்ணுள்ள மாணுக் கர்க்குச் செவியறிவுறுத்தி வருவாராயினர். அங்ஙனம் செய்துவரும் நாளிலே சிவஞானபோதமென்னும் ஒப்புயர் வற்ற செம்பொருள் நூலை நம் தெய்வச் செந்தமிழ்மொழி யிலே அருளிச்செய்தார். இவர் இங்ஙனம் உபதேசம் பெற்றதும், அவ்வுபதேசம் நந்தியெம்பெருமான் வழிவந்த தும் இன்னும் அதுவந்த முறையும், அவ்வுபதேசஞானத்தை எங்ஙனம் நம் தமிழ்மொழியில் ஒருநூலாக அருளிச்செய் தனர் என்பதைப்பற்றியும் பின்வருமாறு சிவஞானபோதப் பாயிரத்தின் கண்ணும், மெய்கண்டதேவரின் தலைசிறந்த மாணுக்கராகிய அருணந்திசிவனுர் தமது சிவஞான சித்தி யாரிலும், அவர் பின்வந்த சந்தான குரவருள் ஒருவராகிய உமாதிபதிசிவனுர் தமது சிவப்பிரகாசத்திலும்,

'மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர் சிவஞானபோதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்டதேவன்'

என்றும்,

'இறைவன் அருள் நந்திதனக் கியம்ப, நந்தி
கோதில்அருட் சனற்குமாரர்க்குக் கூறக்
குவலயத்தில் அவ்வழியெங் குருநாதன் கொண்டு

தீதகல எமக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே'

என்றும்,

'தேவர்பிரான் வளர்கயிலைக் காவல்பூண்ட
திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவிய சத்தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாரு
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவிலருள் மறைஞான சம்பந்தர் இவர்இச்
சந்தானத் தெமையாளுந் தன்மையாரே'

என்றும் கூறியிருத்தல் காண்க.

அச்சுதகளப்பாளரின் குலகுருவாகிய அருணந்தி சிவாச்சாரியர் அக்காலத்திருந்த சகல ஆகமங்களையும் நன்கு கற்று, நமது திருமுறைகளிலும் தேர்ச்சிபெற்று, சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரைத் தாங்கி யிருந்தனர். அத்தகைய சகல ஆகம பண்டிதரே நம் மெய் கண்டதேவருக்குத் தலைசிறந்த மாணக்கராய் வந்தாரென்ருல், நம் மெய்கண்டதேவரின் ஞானநிலைதான் என்னே? அவர் தம் அறிவின் ஒப்பற்ற பெருமைதான் என்னே? பின்பு நம் ஞானப்பெருந்தகை தாம் பெற்ற ஞானப்பொருளை நன்கு பரவச் செய்யும்படி தமது மாணக்கராகிய அருணந்தி சிவனர்க்கும் ஏனையோர்க்கும் கட்டளையிட்டனர். நம் சமயகுரவராகிய ஞானசம்பந்தப்பெருமான் குழவிப் பருவத்திலே அம்மையப்பருடைய திருவருளைப்பெற்று எங்ஙனம் தமிழ்நாடெங்கணும் ஒளிபெறச் செய்தாரோ, அங்ஙனே நம் மெய்கண்டதேவரும் தாம் பெற்ற ஒப்புயர் வில்லா ஞானப்பொருளை நாடெங்கும் தம் மாணவர் மூல மாகப் பரப்பி வருவாராயினர்.

மெய்கண்டதேவர் பதின்மூன்ரும் நூற்ருண்டில் திகழ்ந்தவரென ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறுகின் றனர். அக்காலத்தில் தமிழ்நாட்டின் சமயநிலை பற்றி நாம் சிறிது சிந்திக்கவேண்டும். சைவ சித்தாந்த ஞானம் பண் டைக்காலந்தொட்டு வேத ஆகம காலங்களிலும் இருந்து வந்தபோதிலும், புத்த, சமண காலங்களில் சிறிது நலி வுற்றமை சமய வரலாறு தெரிந்தவர்க்கு நன்கு விளங்கும்.

நம் சமயகுரவர் காலத்தில் அவர்களாலும், திருமூலர் காலத்தில் அவராலும் சித்தாந்தக் கருத்துக்கள் மீண்டும் ஒலி பரப்பத் தொடங்கின. நம் சமயகுரவர் தாம் அருளிச்செய்த அருட்பாடல்கள் மூலம் சமண இருளை ஓட்டிச் சைவ ஒளியைப் பிரகாசிக்கச் செய்தனர். நம் சமயகுரவர் அருளிச்செய்த நூல்களோ தோத்திர வடிவமாக உள்ளன. அவற்றை 'முறைப்படி மெய்யன்போடு நியமமாக ஓதி வருவோர் தாம் விரும்பிய பயன்களை இம்மையிலும் மறுமையிலும் தவருது எய்துவர். ஆனால் சைவ சித்தாந்த ஞானம் அவற்றுள் அங்கும் இங்குமாகக் கிடக்கின்றதேயல்லாமல், அதனை ஒரு தொடர்பான முறைப்பட்ட உருவில் ஆங்குக் காண்டல் இயலாது. ஆகையால் அக் காலத்தில் உள்ள சமயநிலையை உன்னி, சைவ சித்தாந்தத்தை விளக்கும் முறையாக நூல்கள் இன்றியமையாது வேண்டப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றுண்டளவில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய நூல்கள் இருந்த போதிலும், அவற்றின்கண் அனுபவ ஞானப்பொருள்கள் காணக்கிடந்தனவேயன்றி, கடவுள், உயிர், மலம் ஆகிய முப்பொருள்கள் பற்றி ஒருமுறையான விளக்கம் காணப்படவில்லை. ஆகையாற்றான் நம் சந்தான குரவருள் தலைமணியாய் விளங்கிய மெய்கண்டதேவர் கடவுள், உயிர், மலம் ஆகிய முப்பொருள்களின் உண்மை பற்றியும், அவற்றின் இலக்கணம் பற்றியும், பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டாலும் அளவைநூல்வழி நிறுவி, பின்னர் உயிர் இறைவனுடைய பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவதற்குச் செய்யவேண்டிய சாதனம் பற்றியும், அங்ஙனம் சாதனம் செய்து பக்குவம் அடைந்த ஆன்மாவானது அடையும் பாசநீக்கம், சிவானந்த அனுபவம் முதலியன பற்றியும் கூறும் நம் மெய்ஞ்ஞான நூலாகிய சிவஞான போதத்தை அருளிச் செய்வாராயினர். அவர்தம் மாணுக்கராகிய அருணந்திசிவமும் சிவஞானசித்தியாகிய வழி நூலும், தம் கேள்வி, தம் குருவின் விடைகள் அடங்கிய இருபா இருபஃதும், அவர் மாணுக்கராகிய மறைஞான சம்பந்தரின் மாணுக்கராகிய உமாபதிசிவனர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி

விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எழு நூல்களும், இன்னும் மெய்கண்டதேவரின் மாணவர் முப்பத்தொன் பதின்மரில் ஒருவராகிய மனவாசகங் கடந்தார் உண்மை விளக்கம் எனப் பெயரிய ஓர் அரிய நூலும் இயற்றி யருளி னர். இங்ஙனமாக மெய்கண்டதேவர்க்கு முன் உய்யவந்த தேவநாயனார் என்னும் பெயர் கொண்ட இருவர் இயற்றி யருளிய திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரு நூல்களுடன். முன் சொல்லிய சந்தானகுரவரின் நூல்கள் பன்னிரண்டும் சேர்ந்து, பதினன்காகச் சித்தாந்த நூல்கள் வழங்கி வருகின்றன. அவற்றை மெய்கண்ட நூல் கள் என்றும் கூறுவர். ஆகவே நமது சைவ சித்தாந்தக் கொள்கைக்கு நம் சமயகுரவர் முதலியோர் அருளிச்செய்த தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளும், இங்குச் சொல்லிய பதினன்கு சாத்திரங்களும் பிரமாண நூல்களாக நம் தெய்வச் செந்தமிழில் விளங்குவதைக் காணலாம்.

இன்னும் நம் மெய்கண்டதேவர் செய்தருளிய ஒரு தெய்வீக விளக்கத்தைக் கூறி எனது பேச்சை முடிக்க விரும்புகிறேன். அது நம் ஆசிரியர் 'அத்துவிதம்' என்னும் சொல்லுக்குக் கூறிய விளக்கமேயாகும். வேதவியாசர் இயற்றிய பிரம சூத்திரத்திற்குச் செய்யப்பட்ட பேருரை, களாகிய சங்கரபாடியம், நீலகண்டபாடியம், இராமாநுஜ பாடியம், மாத்துவபாடியம் என்பன தமிழ்நாட்டில் பரவி, சமயக் கொள்கைகளில் பெருங் குழப்பத்தை உண்டு பண்ணின. 'அத்துவிதம்' என்னும் சொல்லுக்கு அவற்றில் சொல்லப்பட்ட விளக்கம் சைவ உலகத்தில் ஒரு மயக்கத்தை விளைத்தது. அதனல் நம் மெய்கண்டதேவர் அத்துவிதம் என்னும் சொல்லில் உள்ள நகரம் அதற்குரிய இன்மை, மறுதலை, அன்மை என்னும் பொருள்களுள், அன்மைப் பொருளையே உணர்த்துமெனக் கூறியுள்ளார். அதனை சிவஞானபோதத்தின் 2-ஆம் சூத்திரத்தின் 1-ம் அதிகரணத் துக்கு எதுக்கூறும் இடத்து, "அத்துவிதம் என்ற சொல் லானே ஏகம்என்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை உணர்த்து மாயிட்டு" என்று கூறுமாற்றல் காண்க. ஆகவே, அத்து விதம் என்னும் சொல், 'இரண்டல்லாத' என்றே பொருள் படும். இதன் விரிவை வடநூற்கடலும் தென்னூற்கடலும்

நிலை கண்டுணர்ந்த எம்மாதவச் சிவஞானயோகிகள் அவர் தம் சிவஞானபாடியத்துட் கூறுமிடத்துக் காண்க. அத்து விதம் என்னும் சொற்கு இத்தகைய உண்மைப்பொருள் கண்டமையால் அன்றே, அப்பொருளையே குறிப்பிட்டுப் பிற்காலத்திருந்த நம் தாயுமான அடிகள்,

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டநாதன் அருள் மேவுநாள் எந்நாளோ"

என்று விதந்து கூறுவாராயினர்.

'பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைகள் எல்லாம்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.'

'என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும் [நூல்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டான்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்.'

மெய்கண்டான் தாள்வாழ்க.

மதிப்புரை

சிவஞானபோதம் எளிய உரை: சைவப் பெரியார் **திரு. க. அரங்கசாமி முதலியார்** B. A., அவர்களைச் சைவ உலகம் நன்கறியும். சென்னை அரசினரின் துணைத் தண்டலாளராக (Deputy Collector)த் திகழ்ந்து ஓய்வு பெற்றுள்ள அவர்கள், சிவத்திரு. ஞானியார் அடிகள்பால் நெருங்கிய பெருந்தொடர்புகொண்டு விளங்கியவர்கள். 1946 முதல் 1953 வரை 7 ஆண்டுகள் நம் சமாஜத்தின் செயலாளராக அமைந்து பலப்பல அரும்பெரும் பணிகளை ஆற்றியவர்கள். அவர்தம் குடும்பத்தினர் அனைவருமே, கல்வி கேள்வி அறிவு திரு ஆற்றல்கள் நிரம்பிச், சிவநெறிச் செந்தமிழ் நலங்கள் மிக்குச் சிறந்து திகழ்பவராவர். அனைய பல பெருஞ் சிறப்

பினராய திரு. முதலியார் அவர்கள், அண்மையிற் சில மாதங்கட்கு முன் சேலம் நகரிற் "சிவஞான போதம்" பற்றிப் பத்து நாட்கள் வகுப்பு முறையில் விரிவுரைகள் நிகழ்த்தித், தக்க அன்பர்கள் பலர் வேண்டிக்கொண்டதற்கு இணங்க இச் சிறுநூலை வெளியிட்டுள்ளார்கள். இதன்கண் மெய்கண்டார் வரலாறு, அவர்தம் நூலின் சிறப்பு என்பன வற்றைச் சுருக்கமாக விளக்கி, காப்பு அவையடக்கம் பன்னிரு நூற்பாக்கள் ஆகியவற்றிற்கு யாவரும் இனி துணர்ந்துகொள்ளும் வண்ணம், எளிய இனிய தெளி வுரை வரைந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு நூற்பாவிற்கும் திருமுறைகளிலிருந்தும், வடமொழி நூல்களிலிருந்தும், இஞ்ஞான்றை ஆங்கில ஆய்வு நூல்களிலிருந்தும் தக்க மேற்கோள்கள் காட்டியிருக்கின்றார்கள். நூலின் இறுதி யில் பன்னிரண்டு நூற்பாக்களுக்கும் உரிய ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றும் தரப்பெற்றுள்ளது, "அன்பே சிவம்" "சின்முத்திரை விளக்கம்" "தமிழ்நாட்டுக் கோயில்களின் தற்கால நிலைமை" என்னும் தலைப்புகளில் சிறிய கட்டுரைகளும் இணைக்கப் பெற்றுள்ளன. அவற்றால் ஆசிரியரின் முற்போக்கான விழுமிய சீர்திருத்த நோக்கங் கள் புலனாகின்றன. முதியவயதில், மிகுந்த உழைப் பெடுத்துப் பல அரும்பெரும் நூல்களை ஆராய்ந்து, அன்பும், ஆர்வமும் ஓங்க, ஆசிரியர் இந்நூலினைச் சுருக்கமும் தெளி வும் அமைய எழுதியுள்ளமை பெரிதும் பாராட்டற்பால தாகும். "தோற்றி" "ஒடுங்கி" முதலிய சொற்களுக்கு ஆசிரியர் எழுதியுள்ள விளக்கங்கள் மேலும் ஆராயத் தக்கனவாய்ச் சிந்தனையைத் தூண்டுகின்றன. 45 பக்கங் கள் கொண்டுள்ள இந்நூல், திருத்தமாக வனப்புடன் பதிக் கப்பெற்றுள்ளது. விலை அணு 8. அஞ்சற் செலவு தனி. (1) "திருவடி" அடிவாரம், பழநி; (2) "தமிழகம்", வடமறவனேரி, சேலம்; (3) சாது அச்சுக்கூடம், சென்னை-14 என்னும் முகவரிகளில் இந்நூலைப் பெறலாம்.

சேலம் நகரிற் **சிவஞான போதச்** செழும்பொருளை
சாலநன் றாய்ந்து வகுப்பாகத் தக்கோர்க்குத் தான்நடத்தி
நூலின் வடிவினும் நுட்பங்கள் தோற்றி நுனித்தளித்தான்
சீலன் சிறந்தோன் **அரங்கசாமிச்**செம்மல் தெள்ளியனே.

—முருகவேள்

அறிக்கை

16-3-58ல் சமாஜ நிர்வாக சபைக்கூட்டம் சென்னை 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலுள்ள இல்லத்தில் நடைபெறும். நிர்வாகசபை அங்கத்தினர்கள் யாவரும் வரும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Statement about ownership and other particulars about

"SIDDHANTAM"

1. Place of Publication	... 14, Waren Road, Madras-4
2. Periodicity of its Publication	... Monthly
3. Printer's Name	... D. Mangayarkarasi & V. K. Punithavathi
Nationality	... Indian
Address	... 15, Ganapathy Mudali Street, Royapettah, Madras-14
4. Publisher's Name	... S. Satchidanandam Pillay
Nationality	... Indian
Address	... 175-A, Lloyds Road, Madras-14
5. Editor's Name	... Pulavar Murugavel, M. O. L.
Nationality	... Indian
Address	... 27, Chetty Street, Madras-15
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	"Saiva Siddhanta Mahasamajam" with no shareholders or partners, but only members paying subscriptions. ["Siddhantam" is not a newspaper]

I, S. Satchidanandam Pillai, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Signature of Publisher: (Sd.) S. Satchidanandam Pillai.

Dated, 7—3—1958

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L.

தோற்றம் : 8-3-1896] [மறைவு : 14-3-1958

" அன்னோனை இழந்தஇவ் வுலகம்,
என்னு வதுகொல்? அளியது தானே!

—புறநானூறு